**சுருக்கம்**

பணியமைப்பு - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – நாகப்பட்டினம் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து பணியிடையே காலமான திரு.கா.செல்வராஜ் என்பவரின் மகள் திருமதி.செ.தீபா என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – தனியர் பணியேற்ற நாளான 22.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-1) துறை**

அரசாணை (2 ப) எண். 8 நாள்: 12.06.2023

சுபகிருது வருடம்,
வைகாசி மாதம் 29 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2054,
படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள். 23.01.2021.
2. ஆதிதிராவிட நல இயக்குநரின் கடித ந.க.எண். இ6/2565/2007, நாள்.18.07.2022 மற்றும் 26.09.2022.

-----------

**ஆணை:-**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஆதிதிராவிட நல இயக்குநரின் கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து பணியிடையே 19.03.2004 அன்று காலமான திரு கா.செல்வராஜ் என்பவரது மகள் திருமதி செ.தீபா என்பவருக்கு அரசு விதிகளின்படி இளநிலை உதவியாளர் பணியிடம் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி விதிகள் 10 (அ) (1)இன் படி, கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம், நல்லாடை அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளியில் தனியர் இளநிலை உதவியாளராக 22.01.2022 மு.ப முதல் பணியாற்றி வருகிறார் எனவும், திருமதி.செ.தீபா என்பவர் பணிநியமனத்திற்கு முன்பே திருமணமாகியுள்ளதால், தனியருக்கு வழங்கப்பட்ட பணிநியமனம் குறித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15-ஐ தனியர் சார்பாக தளர்வு செய்வது குறித்து பின்னேற்பாணை வழங்கி, தனியரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, ஆய்வு செய்தது. அதன்படி, நாகப்பட்டினம்

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து பணியிடையே காலமான திரு கா.செல்வராஜ் என்பவரது மகள் திருமதி செ.தீபா என்பவருக்கு கருணை அடிப்படையில் அரசு விதிகளின்படி தஞ்சாவூர் மாவட்டம், நல்லாடை அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் திருமணமாகி வழங்கப்பட்டுள்ளதால், தனியர் பணியில் சேர்ந்த நாளான 22.01.2022 முற்பகல் முதல் தனியரின் பணியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 , பிரிவு 15 (திருமணமான பெண் வாரிசுதாரர்) மற்றும் 28(2) (பணப்பலன்கள் பணிநியமன நாள் முதல் வழங்க) ஆகியவற்றைத் தளர்வு செய்து அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியரின் ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதேனும் இருப்பின், அவற்றை விதிகளின்படி பெறத் தனியர் தகுதியுடைவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.14930/ ட்டி1/2022, நாள்.10.08.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.4319936/G2/2023, நாள். 31.03.2023 இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. லட்சுமி பிரியா**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
திருமதி செ.தீபா, இளநிலை உதவியாளர்,
நல்லாடை அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டம்
(இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை- 600 006/18/35.
நகல்.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ,
செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-600 009.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-600 009,
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009.
மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்)/
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
உபரி நகல்/இருப்புக் கோப்பு.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர் 12/6/2023.
12.6.23